# தேசிய "சிநொட்" கருத்தரங்கின்

# ஆரம்ப தொகுதிக் கூட்டங்களின் முடிவு

"காவலர் நகரத்தைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்

காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஹூ ஆனிமீ 22-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 24-ம் இல.

## தொடர்ச்சி: ஆவணி 26

தூய ஆவியானவரின் திருநாளன்று தேசிய ஒற்றுமை தொனிக்கக் கொழும்பு, சென் லூசியா மாதேவாலய சதுக்கத்தில் ஆரம்பித்த இலங்கை மாகாண 2-ம் "சினொட்", இந்நாட்களில் எமது நாட்டில் திருச்சபையின் முன்னேற்றத்துக்கு எதிராக இருக்கும் முட்டுக்கட்டைகள் எவையென ஆராய்ந்து, அவற்றை அகற்றும் வழிவகைகளை எட்டுத் தினங்களாக ஆலோசித்துவந்தது. அதன்பயனாக நிகழ்ச்சிநிரலில் இடம் பெற்றிருந்த கருமங்களுள் இரண்டு முற்றுப்பெற்றுள்ளன. மேலும் இரண்டு அரைகுறையான நிலைமையில் மறுதொகுதிக் கூட்டங்களுக்குக் குறிக்கப்பட்டுள்ளன. முற்றுப்பெற்ற இருகருமங்கள், திருச்சபையின் செய்தி, தொடர்புகொள்ளும் அமைப்பு என்பனவே. மேலும் ஆலோசனைக்குப் பின்போடப்பட்டுள்ள கருமங்கள், திருச்சபையும் நமது நாடும் என்பதும்: குருமாரும் துறவறமும் என்பதுமே. எட்டுத்தினங்களும் பிரதிநிதிகள் யாவரும் அதிகாலைதொடக்கம், மாலை இறுதியாகப் பொறளை சென் அலோசியஸ் குருமாணவர் கலாசாலை மண்டபத்தில் மூளைக்களைப்பு எய்தும் வேலையில் ஈடுபட்டிருந்தனரெனினும் அவ்வேலையின் புனிதத் தன்மையில் முற்றிலும் தம்மைமறந்திருந்தனர். அடுத்த தொகுதிக்கூட்டங்கள் ஆவணி 26-ம் திகதி ஆரம்பமாகும். செய்துமுடித்த வேலையைப் பற்றிப் பிரதிநிதிகள் யாவரும் மனமகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். கருதினால் ஆண்டகையுடன், மறு மேற்றிராணிமார்களும், குருமாரும் ஒப்புக்கொடுத்த கூட்டுப்பலியுடன் கூட்டங்களின் முதற்தொகுதி முடிவடைந்தது.

## "சிநொட்" கருத்தரங்கில்

"சினொட்" கருத்தரங்கில் நடைபெற்ற பேச்சுக்களின்போது பின்வரும் கருமங்களைப்பற்றி 'சினொட்" அங்கத்தவர்கள் சிலர் தமது அபிப்பிராயங்களை எடுத்துக்கூறினர்.

### இந்நாட்டுத் திருச்சபையின் கட்சிச்சார்பற்றநிலை

"கத்தோலிக்க திருச்சபை அரசியல் கட்சிச்சார்பற்றது. எந்த அரசியற்கட்சியுடனும் அது இணைக்கப்பட்டிருக்கவில்லை. கத்தோலிக்க கொள்கைகளை ஆதரிக்கும் எக்கட்சியையும் ஆதரிக்கும் சுயாதீனம் கத்தோலிக்கர் யாவருக்கும் உண்டு" என இந்நாட்டுத் திருச்சபை பிரகடனம் செய்யவேண்டுமென கலாநிதி பிறயன் டி. கிறெட்சர் கேட்டுக்கொண்டார். இதை ஆதரித்து வணக்கத்துக்குரிய பிதா ஜோ. டி. மெல் பேசுகையில் இத்தகைய பிரகடனத்தை இலங்கை அரசியல் கட்சித்தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் அனுப்பிவைக்கவேண்டுமென்றும் கூறினர்.

### சாதித்திமிரை அகற்றுவோம்

திருச்சபையில் பிளவுகள் ஏற்படுத்துவனவற்றுள் சாதிவித்தியாசங்களும்ஒன்றுஎன்றகருமம் ஆலோசிக்கப்பட்டபோது கண்டி மேற்றிராணியார் லீயோ நானயக்கார அடிகளார் மிக உணர்ச்சியுடன் சாதிவித்தியாசத்தை அகற்ற இச் "சினொட்" கூட்டம் வழிவகுக்கவேண்டுமென்று சாதித்தார். இது விஷயமாக யாழ்ப்பாண மேற்றிராணியார் எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரும், சிலாப மேற்றிராணியார் எட்மன்ட் பீரிஸ் அடிகளாரும் தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர். யாழ்ப்பாண மேற்றிராணியார் தாம் சென்ற 20 வருடகாலமாக சாதிவித்தியாசங்களைத் தமதுமேற்றிராசனத்திலிருந்து அகற்றத் தெண்டித்துவருவதாகவும், ஆனால் இன்னும் அவை முற்றாக அகற்றப்படவில்லையெனினும், நிலைமை முன்னிலும் முன்னேற்றம் கண்டிருக்கிறது என்றும் கூறினர்.

## இனக் குதர்க்கத்தை விடுக

சென்றவாரம் ஆங்கிலநாட்டுக் கருதினால் ஹீனன் அடிகளார் ஆங்கில நாட்டில் இனத்துவேஷம் பரவாது இருக்க மக்களை விழிப்பாக இருக்க வேண்டிக் கொண்டார். "இவர் அந்நியர், இவர் எம்நாட்டவர் என்ற எண்ணம் பரவினால், எம்நாட்டவர் என்று உண்மையாகவே எண்ணக்கூடியவர் மிகச் சிலரேயாவர். இந்த ஞாயிறுதினம் எமது கோவில்களிலிருந்து,போலாந்து, ஐரீஷ், ஸ்கொத்லாந்து, வேல்ஸ் இனத்தவர்களைத் தவிர்த்து விடுவோமானால் கோவில்களில் எஞ்சி இருப்பவர் மிகச் சிலரேயாம். பூசை ஒப்புக்கொடுக்க எஞ்சியிருக்கும் குருமார் தொகையும் மிகச் சிறிதாகவே இருக்கும். ஆகவே, எமது நாட்டின் முன்னேற்றத்தை மனதில் வைத்து, இனத்துவேஷமாகிய பூதத்தைத் தட்டி எழுப்பிவிட வேண்டாம்" என்கிறார் கருதினால் அடிகள்.

## 23-ம்அருளப்ப பாப்பரசரின் சரிதம் சினிமாக் காட்சியாகும்

நியூயோக் நகரக் கத்தோலிக்க சினிமாப்பட நிலையத்தார் 23-ம் அருளப்ப பாப்பரசரின் சரிதத்தைச் சினிமாப்படமாகக் காட்ட முடிவு செய்திருக்கின்றார்கள். இதற்கு வேண்டிய ஒத்துழைப்பை அண்மையில் பாப்பரசரால் நியமிக்கப்பட்ட சமூகத்தொடர்பு நிலையம் கொடுக்க இருக்கிறது. முதன்முதல் சினிமாக் காட்சியாகவும் அதன்பின் தொலைக் காட்சியாகவும் தயாரிக்கப்படும்.

## துரைமார் வேண்டாம் பொறிநுட்ப தொழிலாளர் வேண்டும்

"இந்திய தேச கத்தோலிக்க கல்லூரிகள் தம்மாணவர் துரைமாராகும் நோக்கத்துடன் கல்விபயிற்றுவதைவிட்டு, கடவுள் பக்தியுள்ள நுட்ப தொழிலாளர்களாகக் கல்வி பயிற்றவேண்டும்" என்று யேசு சபைக் கல்விநிலையங்களின் அதிபராகிய வணக்கத்துக்குரிய தேயோ மத்தியாஸ் சுவாமியார் அண்மையில் கூறியுள்ளார்.

## தொழிலாளர் குருக்கள் ஸ்பெயின்தேசத்தில்

சிலதேசங்களில் சிலவருடங்களுக்குமுதல் குருக்கள் தொழிலாளர்களாக மக்களுடன் பொருளாதார வாழ்வில் கலந்துகொண்டு கிறிஸ்தவ போதனைகளைப் பரப்பும் தொண்டு பரவிவந்தது. இவ்வியக்கம் இப்போது ஸ்பெயின் தேசத்தில் பரவிவருகின்றது, இவ்வியக்கத்தினால் பல நன்மைகள் இருப்பதுபோலவே சில பாரதூரமான தின்மைகளுமுண்டு. தொழிலாளர்களான குருக்கள் தொழிற்சங்க இயக்கங்களிற் கலந்துகொள்வதும், வீதிக்கலகங்களில் பங்குபற்றிக்கொள்வதும் இத்தின்மைகளுட் சிலவாகும். இதனால் இந்த இயக்கம் பரவுவதைச் சிலமேற்றிராணிமார் விரும்பவில்லை. எனினும் தொழிலாளர்களாகக் குருக்கள் தொண்டாற்றுவதால் சமய அறிவும் சமய ஒழுக்கமும் பரவுவதற்குப் பேரிய அவகாசம் உண்டு என்பதை எவரும் மறுக்கமுடியாது.

## "சிநொட்" கருத்தரங்குபற்றி மேற்றிராணிமார் கூறியது

சந்தர்ப்பத்தை உபயோகித்து யாவரும் வெளிதிறந்து பேசினர்கள். இவ்வாறு தாம்சரியென நினைத்ததைப் பேசாவிடில் இக்கருத்தரங்கினால் யாது பயன்?

தொடக்கத்தில் பேச்சுக்களில் சிக்கி முன்னேற்றம் குறைவாக இருந்தது. ஆனால், நாட்கள் செல்லச்செல்ல வேகம் திருப்திகரமாய் இருந்தது.

— கருதினால் கூறே.

குருமாரும், இல்லறத்தோரும் பேசுவதைக்கேட்க இங்குவந்தேன். கேட்டுப் பயன் அடைந்தேன்.

இலங்கையின் சகல பாகங்களிலுமிருந்து வந்தவர்களுடன் உறவாடுதல் மிக மகிழ்ச்சி கொடுத்தது.

— திருகோணமலை ஆயர் கிளெனி அடிகளார்.

பிரதிநிதிகள் விவேகமும், உற்சாகமும், அறிவும் உடையவர்களாய் இருந்ததால் சிறந்த முன்னேற்றம் காணக்கூடியதாய் இருந்தது.

— கண்டி ஆயர் நாணயக்கார அடிகளார்,

பிரதிநிதிகள் யாவரும் நல்மனதுடனும், சிறந்த நோக்கத்துடனும் பேச்சுக்களில் பங்குபெற்றுக்கொண்டனர்.

இலங்கையில் பல பாகங்களிலுமிருந்து வந்த கத்தோலிக்கருடன் கலந்து அவர்களது பிரச்சினைகளை அறிவது மிகவும் உபயோகமாயிருந்தது.

— யாழ்ப்பாண ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அடிகளார்.

இலங்கைச் சமூகத்தின் பலதரத்தோரின் அபிப்பிராயங்களைக் கேட்பது மிகவும் உபயோகமாயிருந்தது.

— சிலாப ஆயர் பீரீஸ் அடிகளார்.

ஒரே பொருளைத் திரும்பத் திரும்பக் கூறியதால் நேரம் அதிகம் வீண்போயிற்று.

ஆரம்பத்தில் முன்னேற்ற வேகம் குறைவுதான். ஆனால், பின்பு திருப்திகரமாய் இருந்தது.

— காலி ஆயர் சேரம் அடிகளார்.

பேச்சுக்கள் ஒழிப்புமறைப்பின்றி இருந்ததால் மிக உபயோகமாய் இருந்தன.

— திருகோணமலைத் துணைஆயர் தியோகுப்பிள்ளை அடிகளார்.

பொதுக்காரியதரிசி என்ற பான்மையில் கருத்தரங்கு மிகவும் பயன் உள்ளது என அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேம்.

— கொழும்புத்துணை ஆயர் பெர்ணாந்து அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆனி — 1968

23 ஞா. பரி. ஆவி விழாவுக்குப்பின் 3-ம் ஞாயிறு [ப]
24 தி. புனித ஸ்நாபக அருளப்பர் பிறப்பு. [வெ]
25 செ. புனித வில்லியம் [வெ]
26 பு. புனித அருளப்பரும் சின்னப்பரும் [வெ]
27 வி. கிழமைப்பூசை [ப]
28 வெ. புனித இராயப்பர், சின்னப்பர் திருவிழாவின் திருவிழிப்பு [ஊ]
29 ச. புனிதஇராயப்பர், சின்னப். [சி]


சத்தியவேத
பாதுகாவலன்

1968-ம் ௵ ஆனி ௴ 22-ந் ௳


## திருவருட்சாதனங்களும் அருட்கருவிகளும்

திருவருட்சாதனங்களை ஒவ்வொன்ருக வகுத்து, அவற்றின் எண்ணிக்கையையும், ஒவ்வொன்றின் தனிப்பட்ட தன்மையையும் எடுத்துக்காட்டியது திரிதெந்தின் திருச்சங்கம்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கமோ அவற்றின் தொகுப்பை ஒன்றுபட எடுத்துக்காட்டுகிறது. திருவருட் சாதனங்களுள் தேவநற்கருணை மையமான ஸ்தானத்தை வகிக்கிறது. ஏனைய திருவருட் சாதனங்களெல்லாம் அதை நோக்கியே இட்டுச்செல்கின்றன. ஞானஸ்நானமும், உறுதிப்பூசுதலும் கிறிஸ்துவ தீட்சைச் சடங்கின் இரு படிகளாகும். இவை தேவநற்கருணையில் உச்சநிலையை அடைகின்றன. பச்சாத்தாபம் பாவ விலங்குகளை அகற்றி தேவநற்கருணைக்கு ஒரு வாயிலாக அமைகிறது. இவ்விதமே மற்ற தேவதிரவிய அனுமானங்களும் தேவநற்கருணையில் பூரணத்துவமடைகின்றன.

திருவருட்சாதனங்கள் வெறும் பொருட்களல்ல. அவை திருச்சபையினதும், திருச்சபையின் குருவாகிய கிறிஸ்துநாதரதும் செயல்களாகும். அவற்றின் மூலம் மனிதன் திருச்சபையுள் பிரவேசித்து, மீட்பராகிய கிறிஸ்துவைச் சந்திக்கிருன்.

திருவருட்சாதனங்கள் மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளன. 1. தெய்வீக வாழ்வை அளிப்பது, 2. தேவனுக்கு வழிபாடு செலுத்துவது, 3. கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புவது. முறைப்படி நிறைவேற்றப்படும் திருவருட்சாதனங்கள் இயற்கைக்கு மேலான தெய்வீக வாழ்வை அளிக்கின்றன. ஞானஸ்நானத்தின்மூலம் நாம் அவ்வாழ்வில் பிறக்கிறோம். உறுதிப்பூசுதலின் மூலம் முதிர்ச்சியடைகிறோம், தேவநற்கருணை அவ் வாழ்வைப் போஷிக்கிறது. பச்சாத்தாபம் அதற்கு ஏற்படும் இடையூறுகளை நீக்குகிறது. குருத்துவம் திருவருட்சாதனங்களை அளிக்கும் வல்லமையைக் கொடுக்கிறது. மெய்விவாகம் புதிய உயிர்களை உருவாக்கி, அவர்களுக்கும் தெய்வீகவாழ்வு கிடைக்க வழிசெய்கிறது. நோயாளரின் பூசுதல் இறுதிநேரத்தில் வரக்கூடிய ஆபத்துக்களிலிருந்து தெய்வீக வாழ்வைப் பாதுகாக்கிறது.

திருவருட்சாதனங்கள் தேவனின் அன்பையும், அவரது நன்மைத்தனத்தையும், பெருமையையும் வெளிப்படுத்துகின்றன. எனவே அவை மனிதனுடைய உள்ளத்தில் ஸ்துதி, நன்றி, வேண்டுதல் ஆகிய உணர்ச்சிகளைத் தூண்டுகின்றன. திருவருட்சாதனங்களைப் பெறுவதால் மனிதன் மீட்பை அடைந்து, கிறிஸ்துவோடு ஒன்றித்து தேவனுக்குகந்த விதமாக வழிபாடு செலுத்தும் தகுதியைப் பெறுகிருன்.

திருவருட்சாதனங்கள் தரும் தூய்மை தனிப்பட்டதல்ல, முழுச் சமூகத்தையும் சார்ந்ததாகும். ஏனெனில் அவற்றின்மூலம் மனிதன் திருச்சபையோடு கட்டியெழுப்பப்படுகிருன். திருச்சபையின் அங்கத்தவனாக வாழ்ந்து, அதன் வளர்ச்சிக்காக உழைக்கவும் கடமைப்பட்டிருக்கிருன்.

கிறிஸ்துவினது மீட்பின் அடையாளமாகவுள்ளன திருவருட்சாதனங்கள். எனவே அவற்றைப் பெற விசுவாசம் தேவை, ஆனால் விசுவாசத்தையும் அவை உறுதிப்படுத்தி வெளிப்படுத்துகின்றன. திருவருட்சாதனத்தைப் பெறுபவர் அதிலிருந்து கூடிய நன்மையைப் பெறவேண்டுமானால் அதன் வெளி அடையாளங்கள் தெளிவாயிருக்கவேண்டும். அவருக்கு விளங்கக்கூடிய மொழியில் அது நிறைவேற்றப்படவேண்டும்.

கிறிஸ்துநாதர் தாமே திருவருட்சாதனங்களை ஏற்படுத்தினுர். அவருக்குமட்டுமே அந்த வல்லமை உண்டு. திருச்சபைக்குப் புதுத் திருவருட்சாதனங்களை ஏற்படுத்தும் அதிகாரம் இல்லை. ஆனுல் அவற்றையொத்த அருட்கருவிகளை அது ஏற்படுத்தலாம். சில பொருட்களையோ செயல்களையோ ஆசீர்வதித்து, தனது செபத்தினுல் அபிஷேகம் செய்கிறது. அவற்றின்மூலம் மக்கள் திருவருட்சாதனங்களின் பலன்களை அடைந்துகொள்ள ஏதுவாகிறது.

திருவருட்சாதனங்கள் மூலமும் அருட்கருவிகள் மூலமும், சிருஷ்டி முழுவதுமே தேவனது சேவையில் ஈடுபடுகிறது. அவருக்குப் புகழ்செலுத்த வழியாகின்றது. முறைப்படி கையாளப்பட்டால் எல்லாப் பொருள்களுமே அவரது மகிமைக்குப் பணிசெய்கின்றன. உலகப்பொருள்களைத் திருவழிபாட்டுக்குப் பயன்படுத்துவதிலேயே இவ்வுண்மை அடங்கியுள்ளது.

## றெபெட் கெனடிக்காக மன்ருடினுர் பாப்பரசர்

செனட்டர் றெபெட் கெனடி சுடுபட்டு இறந்தார் என்ற செய்தி 6-வது சின்னப்ப பாப்பரசருக்கு எட்டியதும் அவர் ஆழ்ந்த துயரத்துடன் தமது சிற்ருலயத்துக்குச் சென்று காலஞ்சென்ற கெனடி அவர்களது ஆத்தும இளைப்பாற்றிக்காகவும். அவரது மனைவியர், பிள்ளைகள் குடும்பத்தினரின் மன ஆறுதலுக்காவும் செபித்துக்கொண்டார். மேலும் அவர் இக் கொலைபற்றிக் கூறுகையில் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்படும் இப் பயங்கர நிலை விரைவில் அமெரிக்காவிலிருந்து நீங்கவேண்டுமென்ருர்.

## மருதமடு

நிகழும் ஆனி 27ஆம் தேதியிலிருந்து இலங்கைப் புகையிரதப் பகுதியும், இலங்கைப் போக்குவரத்துச் சபையும் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்துவரும் யாத்திரிகரின் வசதிக்காக ஓர் இணைப்புச் சேவை நடாத்த ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றது. யாத்திரிகரை நேரே மடுத்திருப்பதிக்கு ஏற்றிச் செல்ல பஸ்வண்டிகள் வவுனியாப் புகையிரத ஸ்தானத்தில் காத்துநிற்கும்.

* * *

### விசேஷ பஸ் சேவைகள்

24-6-68 தொடக்கம் 1-7-68 வரையும் யாழ்ப்பாணத்திலிருந்து மடுத்திருப்பதிக்கும், 2-7-68 தொடக்கம் 4-7-68வரையும் மடுத்திருப்பதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் விசேஷ பஸ் சேவைகள் நடாத்தப்படும். விரும்பினேர் 22-6-68 இல் இருந்தே யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் தங்களின் ஆசனங்களை முன்னதாகவே பதிவுசெய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பரிபாலனர்

## விரைவில் பொதுச் சுவிசேஷ நூல்

வத்திக்கானும் மறு கிறிஸ்தவ சபையினரும் சென்ற சில மாதமாக எடுத்துவந்த முயற்சியின் பயனுக விரைவில் ஒரு பொது பைபிள் நூல் யாவரும் உபயோகிக்கக் கிடைக்கப்போகின்றது. இதுகாலவரையும் ஒரு பொது பைபிள் எழுதுவதற்கு பல முட்டுக்கட்டைகள் இருந்தன. அவை யாவும் இரு பகுதியினரிடமும் காணப்பட்ட பொறுமையும், அன்பும், ஆவலும் காரணமாக மேற்கொள்ளப்பட்டன. இதுபோலவே யாவரும் பொதுவாக உபயோகிக்கக்கூடிய "பரமண்டல" செபம், விசுவாசமந்திரம் முதலியனவற்றிலும் வெற்றிகண்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

## "பல இனத்தவர்களுடனும் ஒன்றித்து வாழ்வோம்"

தேசிய உயர்தரக்கல்விப் பீடாதிகாரியாகிய டக்டர் ஜி. பி. மலலசேகர அவர்கள் சென்ற வாரம் மாறவிலா புனித சேவியர் உயர் வித்தியாலய பரிசளிப்பு விழாவில் தலைமைதாங்கி நடத்திய உரையில் நம் நாட்டவருக்கும், நாட்டு மாணவருக்கும் நற்புத்திபுகட்டியிருக்கிருர். எமது நாட்டில் பல இனத்தவர் வாழ்ந்துவருவதால் சகலரும் ஒன்றித்த வாழ்வு நடாத்துவதே முறையாகுமென்று நம் நாட்டுத் தீவிரவாதிகளுக்கு மறைமுகமாகக் கூறியுள்ளார். மேலும், அவர் சென்ற 50வருடகால எல்லையில் கல்விமுறையிலும், பொருளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைச் சுருக்கமாக எடுத்துக்காட்டி, மாணவரிடையே தோன்றியிருக்கும் மாற்றங்கள் விளங்கத்தக்கனவேயென்றுகூறி, காலத்துக்கேற்ற கல்வியைக் கற்பிப்பதுடன் தகுந்த முறைகளையும் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

## உலக மக்களில் அன்பு

இப்பூவுலகில் மக்களாகப் பிறந்து வாழும் சகலரிலும் தேவசிநேகம், பிறர் சிநேகம் அல்லது பரமஅன்பு பிறர் அன்பு என்ற இருவித அன்பு சுவாலித்து எரியவேண்டும். இவை ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப்போல அல்லது ஒரு பறவையின் இரு சிறகுகளைப்போல் அத்தியாவசியமாயிருக்கின்றன. இவையின்றி இவ்வுலகில் ஒருவர் ஓர் உத்தம வாழ்வை வாழவும் முடியாது. மறுவுலகில் மோட்சானந்த பாக்கியத்தை அடையவும் முடியாது.

நாம் பிறரை ஏன் நேசிக்கவேண்டுமென்பதற்குப் பத்துக் காரணங்களை ஒருவர் சுட்டிக் காட்டலாம்.

(1) பரமதேவன் உலகமக்கள் அனைவரினதும் சிருஷ்டிகராய் இருக்கிருர், மனுமக்கள் யாபேரும் இறைவனின் திருச்சாயலில் உண்டாக்கப்பட்டிருக்கிருர்கள்.

(2) சகலசாதி சனங்களும் இறைவனின் மக்களாயிருக்கிருர்கள்... "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே!"

(3) உலகமக்கள் யாபேரும்—அவர்கள் உலகில் எப்பாகத்தில் வசித்தாலும்சரி—ஒரேவிதமான அடிப்படைத் தேவைகளையும் அடிப்படை உரிமைகளையும் உடையவர்களாயிருக்கின்றனர்.

(4) உலகின் ஒரு பாகத்தில் வசிக்கும்மக்கள் தங்கள் நாளாந்த தேவைகளுக்குப் பெரும்பாலும் ஏனையநாடுகளில் வதியும் மக்களின் உதவியை நாடி வாழுகின்றனர்.

(5) சகல மக்களும் மனிதாவதாரமெடுத்துப் பிறந்த தேவகுமாரனின் சகோதரராயிருக்கிருர்கள்.

(6) மனுக்குலம் முழுவதும் ஒரே இரட்சகராகிய யேசுக்கிறிஸ்துநாதரால் மீட்கப்பட்டவர்களாய் இருக்கிருர்கள்.

(7) மனுமக்கள் யாபேரும் மோட்சத்தையே தங்கள்(மறுவுலக) கதியாக உடையவர்களாய் இருக்கின்றனர்.

(8) திருச்சபையில் சேர்ந்த மக்கள் யாபேரும் யேசுக்கிறிஸ்துநாதரின் மறையுடலின் அவயவங்களாயிருக்கிருர்கள்.

(9) "நீங்கள் ஒருவர் மீதொருவர் அன்புகொண்டிருந்தால்தான் நீங்கள் என் சீடர் என்பதை எல்லோரும் அறிந்துகொள்வார்கள்" என்று எமது இரட்சகர்தாமே எமக்குக்கூறியிருக்கிருர்.

(10) எம்மைச்சுற்றி வாழும் ஏழைகளில் விசேஷமாகத் தம்மையே நாம் காணவேண்டுமென்று எமது திருமீட்பராகிய யேசுக்கிறிஸ்துநாதர் எமக்கு வற்புறுத்திக் கூறியிருக்கிருர்.

எனவே என்னைப்போல் என் அயலானையும் நான் நேசிப்பது எனது கடமை அல்லவா? அதுவும் யேசுநாதர் எம்மையே நேசித்தவாறு நாமும் பிறரை நேசிக்கவேண்டுமென்று அவர் எத்தனையோ தடவைகளில் எமக்கு எடுத்து விளக்கியிருக்கிருர்.

பி. ச.

## உண்ணுவிரதம்

இங்கிலாந்துதேசத்தில் வணக்கத்துக்குரிய மேர்ளின் ரெம்பிள் என்னும் மெதடிஸ்தசபைப் பாதிரியார் வெஸ்ற்மினிஸ்ரர் அபி என்னும் இடத்தில் 10 நாள் உண்ணு விரதம் அனுசரித்துவருகின்ருர். அவரது நோக்கம் என்னவெனில் கிறிஸ்தவ சபைகள் யாவும் வறியவர்களின் உதவிக்கெனப் போதியளவு பணத்தைச் செலவுசெய்யாது இருப்பதை அம்பலப்படுத்தி அதனுல் அந்நிலைமையைத் திருத்தியமைப்பதே. பாரிய கோவில்கள் கட்டி எழுப்புவது அவசியமில்லையென்பது இவரது கொள்கைகளில் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூயஆவியின் திருநாளுக்குப் பின்வரும் 2ஆம் ஞாயிறு

### நாம் அழைத்தல்களைப்பற்றிச் சிந்திக்கவேண்டியது என்ன ?

**சுவிசேஷம் (லூக். 14 : 16—24)**

இன்று சுவிசேஷத்தில் வாசிக்கப்படும் உவமையில் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பல சாக்குப்போக்குகளைச் சொல்லி எசமானுடைய விருந்திற்குச் சமுகம்தரவில்லை. அழைப்பை ஏற்றுக்கொள்வதற்குத் தடையாயிருந்தது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் சொந்த அலுவல்கள் மட்டிலிருந்த தனிப்பட்ட பற்றுதலாகும். அவர்களுக்குப் பதிலாக அழைக்கப்பட்ட ஏழைகள் அழைப்பை ஏற்றுக்கொண்டனர். சுவிசேஷகரான பரிசுத்த லூக்காஸ் இங்கு குறிப்பிடும் இந்த ஏழைகள் பணம், பொருள் அற்றவர்கள். சுவிசேஷகரான பரிசுத்த மத்தேயு கிறிஸ்துநாதரின் மலைப்பிரசங்கத்தில் "மனத்தரித்திரர் பாக்கியவான்கள்" எனக்குறிப்பிடுகிறார். விண்ணுலக விருந்தினர் மத்தியில் பக்தியமர நாம் ஒவ்வொருவரும் பண, பொருட்பற்றின்றி இருத்தல்வேண்டும்.

ஞானஸ்நானம் பெற்ற நாம் ஒவ்வொருவரும் நித்திய விருந்திற்கு அழைக்கப்பட்டுள்ளோம். ஞானஸ்நானத்தின்போது நாம் உண்மையில் ஆண்டவரையும், அவரது விருந்தினையும், அவரது அரசாட்சியையும் முதற்றடவையாக ஏற்றுக்கொண்டோம். நாம் ஏற்றுக்கொண்டதை நம் வாழ்வில் வெளிப்படுத்தவேண்டும். உவமையின் உண்மைக்குச் சரித்திரம் சான்று பகர்கின்றது. பலர் ஆண்டவரின் அழைப்பை முதலில் ஏற்றுக்கொண்டபோதிலும் ஒன்றுக்கொன்று முரண்பாடான கிறிஸ்துவின் அரசாட்சிக்கும் பூலோக செல்வங்களுக்கும் ஊழியம் செய்ய முயற்சிப்பதனால் தாங்கள் முன்னர் ஏற்றுக்கொண்ட அழைப்பின்படி வாழத் தவறி விடுகிறார்கள்.

அழைப்பின்படி வாழ்பவர்கள் ஒன்றுக்கொன்று முரணான தேவ அரசாட்சி, பூலோக செல்வம் இரண்டிற்கும் ஊழியம் பண்ணமுடியாது. தங்களை முழுவதும் தேவ ஊழியத்திற்கு அர்ப்பணம் செய்தகன்னியர்கள், துறவிகள், குருக்கள் தமது வாழ்வை ஆண்டவரின் ஊழியத்தில் செலவிடுகிறார்கள். இவர்களின் அர்ப்பண வாழ்வு ஒன்றுமட்டும் இரட்சணியத்திற்கு வழியன்று. இவர்களின் வாழ்வு எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் முன்மாதிரிகையாக இருக்கின்றது. குருக்கள், துறவிகளின் வாழ்வு எல்லா வாழ்க்கைத் துறையிலும் கிறிஸ்துவின் அழைப்பு ஏற்றுக்கொள்ளப்படமுடியும் என்பதற்குச் சான்று பகர்கின்றது. பரிசுத்த பாப்பாசர், மேற்றிராசன ஆயர்கள், குருக்கள், துறவிகள், கன்னியர்கள், குடும்ப வாழ்வு நடாத்துபவர்கள், தனிநபர்கள் யாவரும் கிறிஸ்துவின் இராட்சியத்தில் பற்பல சேவைகள் புரியவேண்டும் என்பது தேவதிட்டமாகும். கிறிஸ்து இராட்சியத்தின் ஊழியர்கள் ஒவ்வொருவரும் வேறுபாடின்றி மனத்தரித்திரர்களாக ஆண்டவரின் அழைப்பைச் சாக்குப்போக்கின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமது அருள்களாலும் வாழ்வின் சந்தர்ப்பங்களாலும் தேவன் தனது திட்டத்தைக் குறிப்பிடும்போது கிறிஸ்தவனின் சித்தமும் அவரின் திருச்சித்தமும் நாளுக்குநாள் ஒருமித்து இயங்குமெனின் தனிக் கிறிஸ்தவனது விண்விருந்தின் மகிமை மேன்மைபெறும். இதற்கு மிகமுக்கியமானது மனத்தரித்திரம். பொருள் ஆசையில் கட்டுண்டமனமானது ஆண்டவரின் அழைத்தலைப் புரிந்துகொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் பெலனற்றதாயிருக்கிறது.

சிலுவையை ஏற்றுக்கொள்ளப் பிதா விடுத்த அழைப்பிற்குக் கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் நிறைந்த மாறுத்தார முன்மாதிரிகையை திவ்விய நற்கருணைப் பலியில் காண்கிறோம். நாம் ஆண்டவரின் மாறுத்தாரத்தில் பங்குபெறுவது திவ்விய நற்கருணைப் பலியில.

* * *

### அன்பில்லா வெறும் தரித்திரம் பயனுள்ளதா ?

**நிருபம் (I அரு. 3 : 13—18)**

பரமஅன்பு கிறிஸ்துவின்மீட்பு அலுவலினால் நமக்கு அருளப்பட்டது, கிறிஸ்து நம்மேல்கொண்ட அன்பினால் நம் மீட்புக்காக மரணமானார். நாமும் நம் சகோதரரை அன்பு செய்யவேண்டும். அன்பில்லாத தரித்திரம் பயனற்றது. அன்பின் மிகுதியினால் கிறிஸ்து தம்மை வெறுமையாக்கினார். இவ்வுண்மையை ஊன்றி உணராவிட்டால் விண்விருந்தின் அழைப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

"சர்வேசுரனுடைய அன்பை எதனால் அறிந்தோமென்றால் அவர் நமக்காகத் தம்முயிரைத் தந்ததினால் தான்; ஆகையால் நாமும் சகோதரர்களுக்காக உயிரையுங் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வுலக செல்வத்தை வைத்திருப்பவன் ஒருவன் தன் சகோதரன் கஷ்டத்திலிருப்பதைப் பார்த்து மனமிரங்காதிருப்பானாகில் அவனிடத்தில் தேவசிநேகம் எப்படி இருக்கும்?" என்று பரிசுத்த அருளப்பர் தமது நிருபத்தில் கூறுகிறார்.

* * *

### வேதாகமத்தில் முக்கிய இடம்பெறும் விடயங்களுள் ஒன்று 'அழைத்தல்'

தமது மீட்பின் திட்டத்தை நிறைவேற்றத்தேவன் ஆபிரகாம், மோசேஸ், ஆரோன், தாவீது என்பவர்களைத் தெரிந்துகொண்டார்.

பிதாவின் அழைப்பிற்குப் பணிந்து கிறிஸ்துநாதர் இவ்வுலகில் தோன்றியது தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றுதலாகிவிட்டது.

கிறிஸ்துவில் புதுச் சிருஷ்டிப்பு ஆரம்பமாகிவிட்டது. அவரில் நாம் நற்செய்தியை முழங்கப் பிதா நம்மையும் அழைக்கிறார்.

* * *

- கடவுளின் ஊழியனான கிறிஸ்து திவ்வியநற்கருணையில் தம்மை முற்றும் வெறுமையாக்கி, அன்பின் போசனமாகத் தந்தருளுகிறார்.
- விண்ணுலக விருந்திற்கு மனத்தரித்திரம் நம்மைத் தகுதியுடையவர்களாக்குகின்றது. பொருட்செல்வம் நாம், அவ்விருந்தில் பங்குபெறுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றது.
- திவ்வியநற்கருணைவிருந்திற்கு நாம் நன்றிசெலுத்துவதனால் "மனத்தரித்திரர் பாக்கியவான்கள்" என்று வசனித்தவரின் அருளுடன் நாம் உண்மையில் மனத்தரித்திரர் ஆக முடியும்.

### செபக்கருத்துகள்

- கடவுளின் பிள்ளைகள் தமது பரிசுத்த அழைத்தல்களைக் கற்கும் கலைக்கூடங்களாகக் கிறிஸ்தவக் குடும்பங்கள் அமையவேண்டுமென்று மன்றாடுவோமாக.
- கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமுள்ள அன்பினைக் கிறிஸ்தவ தம்பதிகள் தமது வாழ்வினில் வெளிப்படுத்தவேண்டுமென்று மன்றாடுவோமாக.
- திருச்சபையானது பரம பிதாவின் அழைப்பை ஏற்றுக்கொண்டது என்பதை உலகம் காணும்பொருட்டுத் திருச்சபையில் தரித்திரம் தழைத்தோங்க வேண்டுமென்று மன்றாடுவோமாக.

# இனிமேல் என்ன?

— ஆசிநாதர் —

அகில இலங்கைத்தேசிய கத்தோலிக்க பேரவை பெருமிதமாக நடந்தேறியிருக்கிறது.

திருமறை வாலாற்றின் மாபெரும் நிகழ்ச்சியாகத் தொடங்கிய மேய்ப்புப் பேரரங்கு மேம்பாடாக நடைபெற்றுவிட்டது.

பத்துத் தினங்களாகப் பரிமளிப்பாய் நடைபெற்ற விவாதக் கருத்தரங்கு மாநாடு மாண்பாக முடிவுபெற்றது.

வாழ்வழிக்கும் வத்திக்கான் சங்கவழியில் இலங்கைத் தேசியமாகாண சங்கமும் திவ்வியமாக நிறைவெய்தியுள்ளது. குறித்த பேரவை ஆரம்ப வைபவமும், விவாதநிகழ்ச்சியும், முடிவு நிகழ்வும் முறையாகவும், முழுமையாகவும் சிறப்புறநடந்ததில் எவருமே வியப்பும் மகிழ்வும் கொள்வர்.

இத்திருமறைப் பேரவையில் குருக்களும், துறவிகளும், இல்லறத்தோரும் மனம்வைத்து — மனம்விட்டு — மனந்திறந்து தாராளமாகப் பேசித் தீர்த்தனர். ஆயர்கள் அனைவரும் அருகிருந்து அறிவுரைதந்து, அமைதிவரம்பிட்டு வந்தனர்.

விவாதவேளையில் நிலவிய பேச்சுச் சுதந்தரமும், கட்டுப்பாடும், கருத்துப் பரிமாறலும், கட்டுக்கோப்பும், ஒழுங்கு முறையும் பங்குகொண்டோரனைவரையும் பக்குவசாலிகளாய் ஆக்கிவிட்டன.

உண்மையிலே இதுஒருதெய்வீகநியமிப்பில் நடைபெற்ற நிகழ்வெனவே கொள்ளவேண்டும்.

இப்பேரவையைக் கடவுளே நடத்தினார் என்று எடுப்பாக எடுத்துரைத்தார் பிறமதப் பிரமுகர் ஒருவர்.

இறைஆவியானவரின் அருள்நிழலில் நடைபெற்ற மதப்பெருஞ்சபை அன்புப்பாணியில் — அமைதிச் சூழ்நிலையில் நடைபெற்றதையிட்டு நாமனைவரும் பேருவகைகொள்ளுதல் பொருத்தமானதே.

இச்சமயப்பேரவை நம்சத்திய திருமறைக்கு ஒருபுதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

நம் மதக் கொள்கைகள்பற்றித் தெளிவான — தெரிதலான கருத்துவிளக்கங்களைக் கண்ணியமாக எடுத்துக்காட்டியிருக்கின்றது.

திருமறைச் சத்தியங்கள், அருட்சாதனங்கள், வழிபாட்டுமுறைகள், சமயவாழ்வுவழிகள், பிறமதத் தொடர்பு ஆகியஇவற்றில் இன்றைய கத்தோலிக்கருக் கிருக்கவேண்டிய எண்ணங்களை நன்கு விளக்கிக்காட்டியிருக்கின்றது.

புதுவகையில் மதத்துக்கும், மக்களுக்கும் புத்துணர்வையும் புதுவிழிப்பையும் இப்பேரவை இங்கே போடு ஊட்டியிருக்கின்றது. சமயவாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

கிறீஸ்துவ மனப்பான்மைக்குச் சிறப்பான மெருகு ஊட்டப்பட்டிருக்கிறது.

சமயவாழ்வில் சலனமற்று, வளர்ச்சியற்றுத் தூங்கிக்கிடந்த நமக்கு இப்பேரவை ஒரு மலர்வு வாழ்வை ஏற்படுத்தியுள்ளது.

சமய அமைப்புமுறைகளில் இதுவரை இருந்துவந்த பழையநியதிகளும், பழமை வழக்கங்களும் மாற்றப்பட்டு, புதியபோக்கில் புனிதம்பூண்ட இயக்கங்கள்பல ஆரம்பிக்கப்படவுள்ளன.

பேரவையில் விவாதத்துக்காக ஏற்கனவே ஒன்பது திட்டக் குறிப்புகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் திருச்சபையின் பணி, திருச்சபையும்நாடும் என்னும் இரு தொகுப்புகளும் தீர ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. குருக்களும், துறவுவாழ்வும் எனும்விடயம் விவாதிக்கப்பட்டு இறுதிவரைவுக்கு அனுப்பப்பட்டுளது. ஏனையவை மறு அமர்வில் விவாதத்துக்கெடுத்துக்கொள்ளப்படும்.

### பொதுமக்கள் குரல்

குறித்த பேரவையில் நடந்தது என்ன? நடக்கப் போவது என்ன? என்றவினாக்கள் பொதுமக்களின் பேரொலியாக இன்று ஒலித்துக்கொண்டிருக்கிறது.

பேரவைத் தீர்மானங்களும், திட்டங்களும் பொதுமக்கள் மத்தியில் வைக்கப்படும். ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் நடைபெறவிருக்கும் சமயக்கூட்டங்களில் இவை நன்கு விளக்கப்பட இருக்கின்றன.

பேரவை முடிவுகள் ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் செயற்படுத்தப்படும் வேளையில் மேற்கூறிய வினாக்களுக்குத் தக்கவிடையும் கிடைக்கும்.

எதற்கும் நாங்கள் தயங்காமலும், தளராமலும் வருவதை எற்றுக்கொள்வதற்குத் தயாராய் இருக்கவேண்டும். கிறீஸ்துபெருமான் தமதுதெய்வீக ஏவுதலால் எமக்களிக்கும் புதிய எண்ணங்களையும் திட்டங்களையும் வெளிப்படுத்தவும் செயற்படுத்தவும் திடமனமுள்ளனவாய் விளங்கவேண்டும்.

வருங்கால நம்சமய வாழ்வும் தாழ்வும் நம் கையிலேயே இருக்கின்றன. வாழ்வளிக்கும் இறைஆவியானவர் வழிவகுப்பாராக.

---

"என் சிறார்களே, நாம் வாயினாலும் பேச்சினாலுமன்றி, கிரிகையிலும் உண்மையிலும் நமது நேசத்தைக் காட்டக்கடவோம்."

— நிருபம்.

('பைபிள் மிசல்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பூசைப்புத்தகத்தில் கருத்துக் குறிப்புகளைத் தழுவி எழுதப்பட்டது.)

— சகோ. கமிலஸ், S. S. J.

---

"இராணிஎலிசபேத்" எனும் நாமத்துடன் பிரித்தானி மிகப்பாரிய பிரயாணக்கப்பல்ஒன்றைக் கட்டவிருக்கின்றது. இன்று சமுத்திரப்பிரயாணத்தில் ஈடுபட்டிருக்கும் கப்பல்களிலெல்லாம் இது மகா தீவிரகதியுடையதாயும் 58,000தொன் நிறையுள்ளதாயும் 2,025பிரயாணிகள் அதிகஉல்லாசமாகப் பிரயாணஞ்செய்யக் கூடியதாயும் இருக்கும். சுவெஸ், பனமாக் கால்வாய்களையும் கடந்துசெல்லக் கூடியதான மிகப்பிரமாண்டமான உலக சுற்றுப்பிரயாணகப்பல் இதுவாகும்.

- மேற்குஜேர்மனியின் விமானத் தொழிலுக்கு 1968ஆம்ஆண்டு ஒரு விசேடப்பட்ட வருடமாகும். அதிகம் குறைந்த கட்டணவீதத்திலே 300பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மணித்தியாலம் 499கடல்மைல்வேகத்திலே பறந்துசெல்லக்கூடிய பாரிய ஆகாய விமானங்களைக் கட்டுவதற்கான ஆயத்தம் நடக்கின்றது. இது ஆகாயபஸ்கள்என அழைக்கப்படும். இன்றைய ஆகாயப்பிரயாண நெருக்கடியை இவைகள் தீர்த்துவைக்குமாம்.

- காலஞ்சென்ற செனற்றர் றெபேட் கென்னடி அவர்களுக்கு ஞாபகசின்னம்ஒன்றை நிறுவுவதிலே இந்தியாதான் முதலாவது நாடாகும்போல் இருக்கிறது. இது ஒருவிவசாய சின்னமாகும். கேரளநாட்டின் தலைப்பட்டனமான திருவனந்தபுர மாணவர்கள் "றொபி கென்னடி" காணி ஒன்றை அமைத்து, வழமையானதிலும் 18 மடங்கு அதிகமான விளைவைத்தரக் கூடிய ஒருபுதுஇளநெல்ஒன்றை அதிலே விதைக்கவிருக்கிறார்கள்.

- மேற்குஜேர்மனியிலே காடுகளில் வேலைசெய்யும் 25வயதுடைய கிறிஸ்ரியன் குரேஸ்என்றதொழிலாளி 40 நிமிஷத்திலே 17பைன் பீரைக்குடித்து உலகசாதனைஒன்றை நாட்டியிருக்கிறான். இதற்குமுன் பிரித்தானியிலே லையனல் ரட்என்பவன் 17பைன் பீரை 60நிமிஷத்தில் குடித்து உலகசாதனையை நிலைநாட்டியிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

### துணுக்காயும் நெல்விளைவும்

யாழ்ப்பாண மாவட்டத்திலே நெல் விளைவில் இரண்டாவது இடத்தைப் பெற்றுவந்த துணுக்காய்ப்பகுதி இம்முறை காலபோக வேளாண்மையில் ஒருலட்சம் புசலுக்குமேற்பட்ட நெல்விளைவைக் கண்டிருக்கிறது. முந்தியகாலபோகத்திலும்பார்க்க இது பன்மடங்காகும். தற்போதைய சிறுபோகவேளாண்மையிலும் அதிகமான நெல்விளைவைக் காணலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

### மின்தறி நிலையங்கள்

காங்கேசன்துறைத் தொகுதிக்கான மின்தறிநிலையம் ஊறணியிலும், கோப்பாய்த் தொகுதிக்கான நிலையம் கோண்டாவிலிலும், யாழ்ப்பாணத் தொகுதிக்கானநிலையம் பெருமாள்கோவிலடியிலும், சாவகச்சேரித் தொகுதிக்கான நிலையம் உசனிலும் அமைக்கப்படவிருக்கின்றன. கோப்பாய்த்தொகுதி மின்தறி 48தறிகளையும், ஏனையமூன்று மின்தறிகளும் 24தறிகளையும் கொண்டனவாயிருக்கும்.

### எம். பி. ஆலோசனை கூறுகின்றார்

"தமிழ்மக்கள்சிலரைக் கள்ளத்தோணிகளெனக் கைதுசெய்யும்நிலை இன்று இருந்துவருகிறது; இந்த அவலநிலை நீங்குவதற்கு அடையாள அட்டைகள் வழங்குஞ்சட்டம் வழிசெய்கிறது; ஒருவர் சட்டபூர்வமான ஒரு குடிமகனாக இலங்கையில் வாழ்கிறாரென்பதை இந்தஅடையாளஅட்டை உறுதிப்படுத்தும்; ஆகவே, இதுகுறித்து நாம் அஞ்சவேண்டியதில்லை; அதனால் அடையாளஅட்டைகள் வழங்குஞ்சட்டத்தை எதிர்ப்பதில் அர்த்தமில்லை" யென்று உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம்அவர்கள் அங்கு நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கூறியிருக்கின்றார்.

### அரிசிஇறக்குமதி குறையும்

உள்நாட்டில் நெல்விளைவு வெகுவாக அதிகரித்திருப்பதால் அரசாங்கம் இறக்குமதிசெய்யவிருந்த 3,00,000தொன் அரிசியிலே 50,000தொன் குறைவாகவே இறக்குமதிசெய்ய விருக்கிறது. அதனால் அடுத்தவருடம் 50,000 அரிசி வேண்டியதில்லையென்று வழமையிலே இலங்கைக்கு அரிசிஉதவும் நாடுகளிடம் தெரிவித்தே அரிசிஇறக்குமதி விஷயமாய்ப் பேச்சுவார்த்தைநடத்த ஆரம்பித்திருக்கிறது.

### உணவுச் செய்கைப் பிரசாரம்

உபஉணவுப்பொருட்களைச் செய்கைபண்ணும் முறைகளில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவந்து யாழ்ப்பாணமாவட்டத்திலே அவற்றின்செய்கையை அதிகப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு யாழ்ப்பாண அரசாங்க செயலக உணவுபொருள் செய்கைப்பகுதி பிரசாரஇயக்கம்ஒன்றைத் தொடக்கியிருக்கிறது.

### சவ்வரிசி-பார்லிவிலை

கொழும்பிலே சவ்வரிசியின் விலை வெகுவாகக் குறைந்திருக்கிறது. ஒரு மாதத்திற்குமுன் ஒருறாத்தல் மூன்று ரூபாவாக விலைப்பட்ட சவ்வரிசி இப்பொழுது றாத்தல்50சதமாகவே விலைப்படுகிறது. உணவுப்பொருள் வர்த்தசரித்திரத்திலேயே இத்தகைய விலைவீழ்ச்சி இதற்குமுன் ஏற்பட்டதேயில்லையாம். புதியவெளிநாட்டுச் சான்றிதழ் திட்டத்தின்கீழ் சவ்வரிசியின் கொள்விலை 45சதமாகும். பார்லியின் விலையும் ஒருறாத்தல் 2ரூபா50 சதத்திலிருந்து தற்பொழுது 1ரூபாவாகக் குறைந்திருக்கிறது.

### விவசாயமன்னருக்குக்காணி

விவசாய மன்னர்களாகத் தெரிவுசெய்யப் பட்டவர்கள் விவசாயத்தில் மேலும் மிகுந்தஅக்கறைகொள்ளச் செய்யுமுகமாக அவர்களுக்குக் காணி வழங்கும் திட்டம்ஒன்றை அரசாங்கம் வகுத்திருக்கிறது இதுசம்பந்தமாகக் காணிக்கமிஷனர்சகலஅரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை ஒன்றில் அவர்களுக்கு அந்தந்தமாவட்டங்களில் காணிகள்வழங்குவதுபற்றி விளக்கமாக எடுத்துக்கூறியிருக்கின்றார்.

### பெற்றேல் ஆராய்ச்சியின்பயன்

வடஇலங்கையின் பலபாகங்களிலும் கடந்த பலமாதங்களாக நடைபெற்ற பெற்றேரல் ஆராய்ச்சியின் விளைவாகப் பெற்றேரல் காணப்படக்கூடிய இடங்களில் நெடுந்தீவே முதலிடத்தைப் பெற்றுள்ளதென்றசெய்தி பரவியகாரணமாக நெடுந்தீவுக் காணிகளுக்கு பெருமதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

### "நான் பணமில்லாதவன்"

லண்டன்நகருக்குச் செல்லும்வழியிலே சென்றதிங்கட்கிழமை கட்டுநாயக்கா விமானநிலையத்தில் அரைமணிநேரம் தங்கியிருந்த மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல்ரஹ்மான் நடத்திய சம்பாஷணையின்போது, "நான் பணமில்லாதவன்; என்றுமே நான் செல்வந்தனாக இருந்ததில்லை; அதை அனுபவித்தவனுமல்லன்; கையில் காசில்லாத நான் இன்னும் மோசமான கட்டத்தை அடைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள முயல்கின்றேன்; இதற்காகத்தான் சினிமாப் படம்ஒன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்துவருகிறேன்; இப்படத்தின் சிலபகுதிகள் மலேஷியாவிலும் மிகுதி லண்டனிலும் படமாக்கப்படும்" எனக் கூறியிருக்கின்றார்.

### எம். பி. பதவியிழந்தார்

சனப்பிரதிநிதிகள் சபையிலே பண்டாரகமைத்தொகுதி எம். பி. யாகத் தெரிவுசெய்யப் பட்டிருந்த திரு. கே. டி. டி. பெரேரா தனதுபதவியை இழந்துவிட்டார். இவரின்தேர்தல் முறையற்றதென ஆட்சேபித்துத் தொடரப்பட்டிருந்த தேர்தல்வழக்கு விசாரணையின் முடிவாகவே இவர் தனதுபதவியை இழந்துள்ளார். தேர்தல்சட்டத்தின் 82'டீ'பிரிவின்படி இவர் பதவியைஇழந்ததாக வழக்கை விசாரணைநடத்திய நீதியரசர் திரு. ஏ. சி. ஏ. அலெஸ்அவர்கள் தீர்ப்பளித்தனர்.

### அடையாள அட்டைகள்

அரசாங்கத்தின் புதியஅடையாளத் திட்டத்தின்கீழ் சுமார்பதினாயிரம் மீனவர்களின் பிரதிமைப்படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் படங்கள் இப்பொழுது யாழ்ப்பாண அரசாங்க செயலகத்திற்கு அனுப்பப்பட்டு அடையாளக்காட்டுகள் அதாவது அடையாளஅட்டைகள் தயாரிக்கப்படுகின்றன. வருகிற ஆடிமாத ஆரம்பத்திலே இந்தமீனவருக்கெல்லாம் அடையாளஅட்டைகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### பாராளுமன்ற கூட்டத்தொடர்

பாராளுமன்ற கூட்டத்தொடர் இம்மாதம் 21ஆம்திகதி கலைக்கப்படுமென்றும், பின்னர் அதன் புதியகூட்டத்தொடர் வருகிறஆடிமாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகுமென்றும் தெரியவருகிறது. புதியகூட்டத்தொடரை அன்றுதினம் கவர்னர்-ஜெனறல் ஆரம்பித்துவழமைபோலச் சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

## மேய்ப்பர் சங்கப்பேரவையில் சிலநாட்கள்

(பி. சவரிமுத்து)

இம்மாதம் 2-ந்தேதி ஆரம்பமாகிப் 10-ந்தேதி முடிவுற்ற இலங்கை மாகாணச் சங்கநிகழ்ச்சிகளில் பற்குபற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததைப் பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியநிகழ்ச்சிகளுள் ஒன்றாய் இச்சங்கம் இடம் பெறுகிறது. இதைப்போன்ற சங்கம் இதற்குமுன் நடைபெறவில்லையென்றே கூறவேண்டும்.

இலங்கைத் திருச்சபையின் ஆறு மேற்றிராசனங்களைப் பரிபாலிக்கும் ஆறு ஆயர்களும், உதவிஆயர்களும், உதவி ஆயர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் குருமுனிவர்களும், ஆயரின் ஆலோசனைக்குழு அங்கத்தவர்களும், துறவற சபைகளின் தலைவர்களும், அவற்றின் பிரதிநிதிகளும், குருமார், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள், சாதாரண கத்தோலிக்கரும் உட்பட 230 பிரதிநிதிகள் இச்சங்கத்தில்கலந்து கொண்டனர். இச்சங்கம் நடைபெற்ற புனித ஞானப்பிரகாசியார் குருமடமண்டபம் திருச்சபையின் புனிதத்துக்கும், ஒற்றுமைக்கும், சமத்துவத்துக்கும், சகோதரத்துவத்துக்கும் நற்சான்று பகர்ந்தது எனலாம்.

பொறுப்புணர்ச்சியும், தகுதியும்நிரம்பிய கத்தோலிக்க சமயத்தின் பொறுக்கு மணிகளாகிய இவர்கள் — ஆண்களும் பெண்களும் இலங்கையில் வதியும் பலமொழியினரையும், தொழிலாளர்களையும் சார்ந்தனராயிருந்தனர். இவர்கள் சகலரும் தங்கள் உள்ளத்தில் இலங்கைத் திருச்சபையை எவ்வாறு புதுப்பித்து அமைக்க முடியுமென்ற ஒரே உணர்ச்சியை உடையவர்களாயிருந்தனர். மேலும் இவர்கள் கத்தோலிக்க மக்களிடையே காணும் ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் காட்சியளித்தனர்.

இப்பிரதிநிதிகள் வயது, அனுபவம், அறிவு, தேவபக்தி என்பனவற்றில் பலவித வித்தியாசங்களை யுடையோராயினும், விரிந்த மனப்பான்மையுடனும் நல்லெண்ணத்துடனும் மேய்ப்புப் பிரச்சினைகளுக்கு இலங்கையில் தகுந்தமுடிவுகளைக் காணவேண்டுமென்ற ஒரே நோக்கத்தையே உடையவர்களாகக் காட்சியளித்தனர். இலங்கைத் திருச்சபையின் தற்கால நிலையைப் பற்றியும், எதிர்காலத் தேவைகளைப் பற்றியும் ஆழமாக ஆராய முனைந்துநின்றனர். இவ்வித மறுமலர்ச்சி 2ஆம் வத்திக்கான் சங்கஏடுகளில் குறிப்பிடப்பட்டவாறு, எவ்விதம் தேசியமொழி, கலாசாரம், பண்பு, சமூகம், சமயம் ஆதியனவற்றிற் கேற்றமுறையில் ஏற்படமுடியுமென்று கலந்தாலோசிக்கக் கங்கணங்கட்டி நின்றனர்.

தேசிய பரிபாலனகுழுவால் இப்பேரவையின் ஆலோசனைக்கு ஒன்பதுஏடுகள் கொண்டுவரப்பட்டன. இவற்றுள் இரண்டு ஏடுகளே முற்றாக விவாதிக்கப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவையாவன: "திருச்சபையின் பணி"; "திருச்சபையினுள் விளங்கும் தொடர்புகளும் உரையாடலுக்கான அமைப்புகளும்". "திருச்சபையும் நாடும்" என்றஏடு தகுந்தளவுக்குத் தர்க்கிக்கப்பட்டது. அதுதிரும்பவும் எழுதப்பட்டது. திருப்பிஎழுதப்பட்டஏடு மீண்டும் ஆவணி 26-ந்தேதி துவக்கம் 30-ந்தேதிமட்டும் நடைபெறவிருக்கும் இரண்டாம் அமர்வில் ஆலோசனைக்கு எடுக்கப்படும். அதன்பின், "குருத்துவமும், துறவறவாழ்வும்" என்றஏடு பற்பல முனைகளிலிருந்து விவாதிக்கப்பட்டது. இந்தஏடும் திருப்பி எழுதப்பட்டு அடுத்த அமர்வில் ஆலோசனைக்கு எடுக்கப்படும்.

இச்சங்கத்தில் சமூகமளித்த குருமடப் பேராசிரியர்களும், யேசுசபைக் குருமாரும், ஏனைய குருமாரும், தத்துவசாஸ்திரம், இறையியல் ஆகிய துறைகளின் உச்சநிலைக்குப் பிரதிநிதிகளை இட்டுச்சென்றனர். ஆனால், பொதுநிலையினரின் பிரதிநிதிகளோ எவ்வாறு திருச்சபையை இலங்கையில் உண்மையான உயிருள்ள ஸ்தாபனமாக மாற்றி அமைக்கலாமென்று மிகவும் திட்டவட்டமான வழிவகைகளை எடுத்துக்கூறினர். இடையிடையே கொழும்பு அதிமேற்றிராணியாரான கருதினாலும், ஏனைய ஆயர்களும் கூறிய குறிப்புகளின் உதவியைக் கொண்டு சல்லாபங்கள்யாவும் சத்தியத்தை விட்டுவிலகாதமுறையில் நடைபெற்றன.

இச்சல்லாபங்களில் ஞானம், ஹாஸ்யம், விவேகம்என்பன வெளிப்பட்டு அளப்பற்றநன்மை அளித்தன. வயது, கல்விஅந்தஸ்து, மொழி, ஆண்-பெண் என்றபாகுபாடின்றி எல்லோரும் சமரசமான முறையில் சல்லாபங்களில் பங்குபற்றினர். துறவிகளும் ஏனையோரும் தத்தம் அறிவுக்கும், அனுபவத்துக்கும் ஏற்றமுறையில் பங்கெடுத்து, இலங்கைத் திருச்சபைக்கு எவ்வாறு புத்துயிரூட்டி, தேசிய திருச்சபையாக அதை மாற்றலாம்என்று கலந்தாலோசித்தனர்.

திருச்சபை அந்நிய நாட்டுக்கோ, மேற்குத் தேசங்களுக்கோ சொந்தமானதல்ல என்றஎண்ணம் ஆழமாக எல்லோர்மனதிலும் பதிந்திருந்தது. அங்குள்ள பிரதிநிதிகளைப்போலவே திருச்சபை இத்தேசத்துக்கும், இம்மக்களுக்கும் சொந்தமானது. ஆனால், இப்படிப்பட்ட ஓர்உருவத்தை எவ்வாறு சாதாரண பிறசமயத்துக்குச் சேர்ந்த மக்களின்மனதில் ஏற்படுத்த முடியுமென்ற பிரச்சினையே பிரதிநிதிகளைப் பித்தலாட்டிக் கொண்டிருந்தது.

இப்பெரிய பிரச்சினைக்குத் தகுந்த முடிபு பூரணமாக இன்னும் காணப்படவில்லையாயினும், தூயஆவியானவரின் ஏவுதலுடன் பிரதிநிதிகள் ஓரளவுக்கு முடிவு கண்டிருக்கிறார்கள் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். இன்னும் இரண்டு மாதங்களின்பின் நடைபெறவிருக்கும் 2ஆம் அமர்வில் இப்பிரச்சினை மீண்டும்ஆழமாக ஆலோசிக்கப்பட்டுத் தகுந்தமுடிபு கண்டுபிடிக்கப்படும் என்பதே என் நம்பிக்கை. கத்தோலிக்க திருச்சபை இலங்கை மக்களின் வாழ்க்கையின் ஓர்அம்சமாக அமையவேண்டும். அது எமது தேசமக்களின் சமயங்களுள் ஒன்றாக இடம்பெற வேண்டும். எனவே, தூயஆவியானவர் இலங்கை மாகாணச்சங்கப் பிரதிநிதிகளை வழிநடத்தி, தெளிவுறுத்தி, தூய்மைப்படுத்தி இரண்டாம் அமர்வுமட்டும் அவர்களுக்கு இன்னும் வேண்டிய அருளை மழைமாரியாகப் பொழியுமாறு அனுதினமும் மன்றாடக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இன்றும், சங்கஅமர்வுமட்டும் அனுதினமும் இதுவே எங்கள் பிரார்த்தனையாக நாம் வாழ்வோமாக.

### யாத்திரிகர்களுக்கு உணவுவசதி

மருதமடுத்திருப்பதியில் நடைபெறவிருக்கும் ஆடிப்பெரியதிருநாளுக்கென்று இலங்கையின் நாலுபகுதிகளிலுமிருந்து செல்லும்யாத்திரிகர்கள் தட்டுப்பாடின்றிக் கட்டுப்பாட்டு விலையிலும், மலிந்தவிலையிலும் உணவுப்பொருட்களை வாங்கிக்கொள்ள்வசதியாய் வியாபாரதலம்ஒன்றை அப்பதியில் திறந்துவைக்க நானாட்டான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முடிவுசெய்திருப்பதாய்த் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுப்பகுதிச் சற்பிரசாத சமாகமச் செயற்குழு வெளியீடு—2

# அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்

கூறியது: அன்பர் யேசுவின் கொடை.

இதில்: அன்பர் யேசு தாம் அளிக்கவிருக்கும் கொடையை நாம் ஏற்றுக்கொள்ளும் படியாக நம்மை ஆயத்தம் செய்கிறார்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

அன்பர் யேசு தம்மை நமக்கு அளித்தது அவர் உள்ளத்தில் எதிர்பாராமல் எழுந்த உணர்ச்சிப்பெருக்கத்தினால் அல்ல. இது அவருடைய உள்ளத்தில் அநேககாலமாய் வளர்ந்துவந்த ஓர் ஆசையின் விளைவு. "இந்தப்பாஸ்காவை உங்களோடுகூட உண்ணும்படி ஆசைமேல் ஆசையாய் இருந்தேன்." அன்பர் யேசுவின் இந்த ஆசை வளர்ந்துகொண்டிருக்கிறது. தமது ஆசையை நிறைவேற்றச் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார். அவர் நிறைவேற்றவிருக்கும் காரியம் மனிதபுத்திக்கப்பாற்பட்டது. ஒரு தாய் தன் உதிரத்தைத் தன் குழந்தைக்கு அமுதாகக் கொடுப்பதைத் தான் நாம் அறிவோம். ஆனால் ஒருவர் தன் மாமிசத்தையும், இரத்தத்தையும் தன் நண்பர்களுக்கு உணவாகக் கொடுத்ததை உலகம் இதுவரையும் அறியாதது. கல்விமான்களும், புத்திதீட்சணியமுடையவர்களும் இதை விளங்கிக்கொள்ள முடியாமலிருக்கும்போது ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் உள்ள மீனவர்கள் இவ்வித அன்பளிப்பை எப்படி விளங்கிக்கொள்ளமுடியும்? இதை யேசுநாதர்தாமே அப்பேர்துள்ள சூழ்நிலைகளைத் தமக்குச் சாதகமாக்கித் தாம் கொடுக்கப்போகும் அருங்கொடையை மனிதர் ஏற்கும்படியாக அவர்களை ஆயத்தம் செய்தார்.

யேசு கலிலேயாக் கடலைத்தாண்டி அண்மையிலிருந்த மலைமேல் ஏறித் தம் சீடர்களோடு அங்கு அமர்ந்திருக்கிறார். அவர் செய்த அதிசயங்களைக் கண்டு ஒரு பெருங்கூட்டம் அவரை அங்கு பின்தொடர்ந்தது. அவர்களை யேசு ஏறெடுத்துப்பார்த்து: "இவர்கள் எல்லோரையும் உண்பிப்பதற்கு எங்கிருந்து அப்பம் வாங்குவது" என்று பிலிப்பைக்கேட்டார். தாம் செய்யப்போவதை அறிந்திருந்தும் அவரைச் சோதிக்கவே இவ்வாறு கேட்டார். அதற்குப் பிலிப்பு: "இருநூறு வெள்ளிக் காசுக்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கொரு சிறுதுண்டுகூட வராதே" என்றார். அவருடைய சீடருள் ஒருவரும், சீமோன் இராயப்பருடைய சகோதரருமான பெலவேந்திரர், "இங்கே ஒருபையனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பமும், இரண்டு மீனும் உள்ளன. ஆனால், இத்தனை பேருக்கு இது எங்கே!" என்றார்.

யேசுவோ "மக்களைப் பந்தியமர்த்துங்கள்" என்றார். அங்கே நல்ல புற்றரை இருந்தது. எல்லோரும் அமர்ந்தனர். அவர்களுள் ஆண்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம். யேசு அப்பங்களை எடுதது நன்றிகூறி, பந்தியமர்ந்திருந்தவர்களுக்குப் பகிர்ந்தளித்தார், அவ்வாறே மீன்களையும் கொடுத்தார். வேண்டிய மட்டும் வாங்கியுண்டார்கள். அவர்கள் வயிறார உண்டபின். "மீதியான துண்டுகளை ஒன்றும் வீணாகாதபடி சேர்த்து வையுங்கள்" என்று தம் சீடரிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே சேர்த்து, மக்கள் எல்லோரும் உண்டபின், மீதியான துண்டுகளைப் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினர். யேசு செய்த இந்தப் புதுமையைக்கண்டு, மக்கள், "உலகிற்கு வரப்போகும் தீர்க்கதரிசி உண்மையில் இவர்தான்" என்றார்கள். ஆகையால் அவர்கள் தம்மை இராசாவாக்கும்படி பலவந்தமாய்த் தம்மைப் பிடிக்கவரப் போகிறார்கள் என்று யேசுநாதர் அறிந்து, மறுபடியும் தனியே மலையின்மேல் ஏறி, விலகிப்போனார்" (அரு. 6 ; 5—15).

அடுத்தநாள் கப்பர்நாமுக்குத் திரும்பிய சனங்கள் அங்கு யேசுவைப்பார்த்தபொழுது பிரமித்தவர்களாய் "ராபி, எப்போது இங்குவந்தீர்?" என்று கேட்டனர். யேசுமறுமொழியாக, "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் என்னைத் தேடுவது அற்புதங்களைக் கண்டதாலல்ல, அப்பங்களை வயிறார உண்டதால் தான். அழிந்துபோகும் உணவுக்காக உழைக்கவேண்டாம்; முடிவில்லாத வாழ்வளிக்கும் நிலையான உணவுக்காக உழையுங்கள். அதை மனுமகன் உங்களுக்குக் கொடுப்பார். ஏனெனில் அவரையே தந்தையாகியகடவுள் தம் அதிகாரத்தைக் கொடுத்து அனுப்பிவைத்தார்" என்றார் (அரு. 6 : 25—27). (தொடரும்)

---

எமது அன்புத் தந்தை

வண. ஜே. வீ. சோமாஸ், யே. சு.

அவர்கள்

ஆனி 19-ந்திகதி இறைவனின் கரத்திலே

ஆதரவு தேடிச்சென்ற

## 1-வது வருட மரணஞாபகம்

இறையன்பில் தன்னைத் தியாகம் செய்து தன் நலத்தை அழித்து அதன் மேல் அன்புச்சமாதி கட்டிய அவரை, மரக்கொம்பு நித்திய சமாதி கட்டிவிட்டது. அன்பிற்கோர் உருவம் அவர். வாழ்வு ஏழ்மையின் சின்னம், தரித்திரரும் துன்புறுவோரும் அவரது நண்பர்கள். அண்ணல் கிறிஸ்துவின் அழகிய சாயல் அவரிலே கண்டதென்றாலும் மிகையாகாது. கன்னியரின் கருத்தரங்கு வகுப்பிலே அவரது ஒவ்வொரு துடிப்பும் இறையன்பைப் பறைசாற்றியது. இறையின் இன்ப வெள்ளம் பாய்ந்தோடி உள்ளங்களிலே உறையவைத்த உத்தமர். போதனை ஏடுகளிலே ஏறி சாதனையில் இடம்பெற்ற இன்பநாதன் சோமாஸ் தந்தைக்கு நித்திய இளைப்பாற்றியை வேண்டி நிற்போம்.

"எங்கு நோக்கினும் உந்தன் உருவம் எங்கள் கண்முன் இலங்குதே. உயரத் துடிக்கும் நற்பண்பு கொண்ட செயல்கள் உலகை விட்டுத்தான் சென்றதோ? உம்மை நினைந்து துடிக்கும் கார்மேல் சபை கன்னியர் உள்ளங்கள், துடிக்கும் உள்ளங்களில் நின்று எழும் துள்ளும் பக்திநிறை சோககீதங்கள் முடிவில்லா பேரொளியை ஒளிரச் செய்வதாக."

அப்போஸ்தலிக்க கார்மேல்சபை

அச்சுவேலி.

---

### நன்றி

பிறேக்நகர குழந்தை யேசுவின் இரக்கத்தால் பெற்ற உதவிகளுக்காக எனது தாழ்மையான நன்றியைச் செலுத்துகிறேன்.

85/68. அடியான்.

* * *

மண்கும்பான் அர்ச். அந்தோனியாரின் மூலம் கிடைக்கப்பட்ட சலுகைகளுக்காக எனது நன்றியைப் பிரசுரிக்கிறேன்.

85/68 பக்தன்.

---

மௌனமே மங்கையருக்கு
மேன்மையான மணி ஆரம்.
ஆனால், அணிந்தால் அல்லவோ?

---

# பாப்பரசரின் ஆருவது பிரயாணம்

தென்னமெரிக்காவிலே அதிகவளம் பொருந்திய நாடுகளில்ஒன்றான கலம்பியாநாட்டின் தலைப்பட்டணமாகிய பொகொட்டாநகரில் வருகிறஆவணி மாதம் 18ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடந்தேறவிருக்கின்ற 39-வது சர்வதேச திவ்வியசற்பிரசாத மகாநாட்டுக்குப் பரிசுத்ததந்தைஆரும் சின்னப்பபாப்பரசர் சமுகமளிக்கவிருப்பது இப்பொழுது நிச்சயமாகிவிட்டது. இந்தமகாநாட்டிற்குச் சமுகங்கொடுக்குமுகமாக உலகமுழுவதிலுமிருந்து பத்துலட்சம்மக்களுக்குமேல் அந்நகருக்குச் செல்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

லத்தீன்அமெரிக்காவென அறியப்படுகின்ற தென்னமெரிக்காவுக்குப் பாப்பரசர்ஒருவர் தமது ஆளுகைக்காலத்தில் விஜயஞ்செய்வது இதுவேமுதன்முறையாகும். ஆயினும் சின்னப்பபாப்பரசர் மிலான்நகர் அதிமேற்றிராணியாராக இருந்தபொழுது தென்னமெரிக்க கண்டத்தைத் தரிசித்திருக்கின்றார். அவர் தமது ஆளுகைகாலத்தில் நடத்தவிருக்கும் ஆருவது பிறநாட்டுப் பிரயாணம் இதுவாகும். மேலும் அவர் நடத்தவிருக்கும் அதிகம்நீண்ட தூர—அதாவது 14,660மைல்தூரப் பிரயாணமும் இதுவாகும். இத்தரிசனையின்போது அவர் ஏனையலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு விஜயஞ்செய்யமாட்டார்.

ஐந்துவருடங்களுக்குமுன் பாப்பரசரானபின்னர் அவர் வெளிநாடுஒன்றுக்கு நடத்தும் ஆருவதுபிரயாணம் மாத்திரமல்லஇது, அவர் சமுகமளிக்கும் இரண்டாவது சர்வதேசசற்பிரசாதமகாநாடும் இதுவாகும். 1964ஆம் ஆண்டு மார்கழிமாதம் பம்பாய்நகரில் நிகழ்ந்த சர்வதேசமகாநாட்டுக்கு அவர்முதலாவதாகச் சமுகங்கொடுத்தார். அவருடைய ஏனையபிரயாணங்கள் 1965ஆம்ஆண்டு ஐக்கியநாடுகள் மகாசபையில் உலகசமாதானத்துக்காகப் பரிந்துபேசுவதற்காக நியூயோக்நகருக்கும், 1964ஆம்ஆண்டு தை மாதம் பரிசுத்தநாட்டுக்கும், பின்னர் பாத்திமா திருசேத்திரத்திற்கும், சென்றவருடம் துருக்கிதேச இஸ்தன்பூல்நகருக்கும் நடைபெற்றுள்ளன.

தென்னமெரிக்காவில் நடைபெறும் மூன்ருவது சர்வதேச சற்பிரசாதமகாநாடுஇதுவாகும். இதற்குமுன் அங்கே முதலாவதாக ஆர்ஜென்ரினாவின் தலைப்பட்டணமாகிய புவெனேஸ்அயேர்ஸ் நகரிலும், இண்டாவதாக பிறேசில்நாட்டின் தலைப்பட்டணமான றியோ ஜனேய்றோநகரிலும் நிகழ்ந்துள்ளன. பொகொட்டாநகரில் ஒருவாரகாலமாக நிகழவிருக்கும் சற்பிரசாதமகாநாட்டினை முடித்துவைப்பதற்காகப் பாப்பரசர் ஆவணிமாதம்25 ஆம் திகதி அங்கு விமானமூலம் பறந்துவருவாரெனக் கலம்பியாவின் திருச்சபைவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

# 39-வது அனைத்துலக நற்கருணை மகாநாடு

1968ஆம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 18 ஆம்தேதி கொலம்பியாவிலுள்ள பொகோட்டோநகரில் 39-வது அனைத்துலக நற்கருணைமாநாடு ஆரம்பமாகும். திறந்த வெளியில், வட்டமான வடிவில் பெரிய அளவில் கோவில் இதற்காகக் கட்டப்படுகிறது. இதற்கு வெளியில் சுற்றிலும் அகன்றஇடமும் உண்டு. 360-க்கு மேற்பட்ட குருமாரும், இல்லறத்தோரும் வேலைமுடிக்க அயராதுஉழைத்துத் தயார்செய்கின்றனர். மாநாட்டின் இறுதியில் பாப்பிறை கலந்துகொள்ளும் நிகழ்ச்சியும் தற்போது இடம்பெற்றுள்ளது. நற்கருணைமாநாட்டின் மேன்மையை எடுத்துரைத்து, குடும்பங்களுக்கு அறிவுரை வழங்கத் தேசியகழகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்துலக நற்கருணைமாநாடு இலத்தீன் அமெரிக்காவில் நடைபெறுவது மூன்ருவது தடவையாகும். 1934 ஆம் ஆண்டில் புவனஸ் எர்ஸ் நகரிலும், 1965ஆம்ஆண்டில் ரியோடி ஜானேரோவிலும் அனைத்துலக நற்கருணை மாநாடு நடைபெற்றது.

### நிதி வசதி:

கொலம்பியா அரசு 30மில்லியன் பெசோஸ் (Pesos Fund) தொகையை உணவுவிடுதிகளை அமைக்கவும், சாலைகளை அமைக்கவும் ஒதுக்கியுள்ளது. கல்வி நிறுவனங்களையும், மடாலயங்களையும் யாத்திரிகர்களுக்குத் தக்க வசதியளிக்கும்பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ளது. பொகோட்டாஅரசின் விமானத்தில் 8600 அடிஉயர விண்வெளியில் சுமார் 14மணிநேரம் பயணஞ்செய்து பாப்பிறை உரோமையிலிருந்து பொகோட்டாவந்து சேருவார். விமானத்திலிருந்தே கொலம்பியா நாட்டில் சிதறிக்கிடக்கும் மலைகளையும், அடர்ந்த காடுகளையும், சமவெளிகளையும், இந்திய சிற்றூர்களைப்போன்ற கிராமங்களையும், வளர்ந்துவரும் நகரங்களையும் கண்டுகளிப்பார். இந்நாடு தென்னமெரிக்க குடியரசில், கடற்கரையுடைய தாய் பசிபிக் பெருங்கடலுக்கும், கரிபியன் கடலுக்கும் இடையில் உள்ளது. பொகோட்டாநகர் கடற்கரையிலிருந்து 750மைல் உள்நாட்டில், கடல்மட்டத்திற்குமேல் $1\frac{1}{2}$மைல்உயரத்தில் அமைந்துள்ளது. நீண்ட பள்ளத்தாக்கையும், கிழக்கு ஆண்டிஸ் மலைத்தொடரையும் கொண்டுள்ளது. இந்நாட்டு மலைத்தொடரில் பனிஉறைந்துள்ளது. ஆனால், பொகோட்டா வசந்தகால நகரமாகவே இருக்கிறது. இந்நகர் மிக அழகானது. விமானத் தொழிற்சாலைகள் நிறைந்துள்ளது. ஸ்பானிஷ் கலைக் கட்டடங்களைக் கொண்டுள்ளது. ஸ்பானிஸ் கலை, கட்டடங்களிலும், கோவில்களிலும், திருஉருவங்களிலும், ஓவியங்களிலும் காணப்படுகிறது.

— சர்வவியாபி

---

● "பிஓ ஏசி" என்ற பிரயாணஆகாயவிமான ஸ்தாபனத்தின் பிரமாண்டமான கொங்டேஎனும் வர்த்தகவிமானத்தைச் செலுத்துவதற்குக் கப்ரின் ஜேம்ஸ் அன்ட்றுஎன்றபோனவிமானி தெரிவுசெய்யப் பட்டிருக்கின்றார். இவர் ஒருஸ்கொத்திலாந்தர் 45வயதுடையவர். இவருக்கு வருடச்சம்பளம் 18,000பவுண். அதாவது 22,000ரூபாவரையிலாகும்.

● டக்றர் மாட்டீன் லூதர் கிங் அவர்களைக் கொலைசெய்தவனெனக் கருதப்படுகின்ற ஜேம்ஸ் ஒற்றேஎன்பவன் லண்டன் விமானநிலையத்தில் கைதுசெய்யப் பட்டபோது றேமண்ட் ஜோர்ஜ் என்ற போலிப்பெயரோடு லண்டனிலிருந்து பெல்ஜியதேச பிறசெல்ஸ்நகருக்குச் செல்லவிருந்தான். அப்பொழுது அவனிடம் லைசென்ஸ் இல்லாத துப்பாக்கிஒன்றும் காணப்பட்டதாம்.

● ஐக்கிய அமெரிக்கதேச ரெக்சாஸ் மாகாணத்தைச்சேர்ந்த டல்லாஸ் நகரிலே உலகில் முதன்முறையாகச் சென்ற8ஆம்திகதி ஒருபெண்ணுக்கு இருதய மாற்றுப்பொருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஒரு ஆடவனின் இருதயமே இந்தப்பெண்ணுக்குப் பொருத்தப்பட்டிருக்கிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி துறந்த பாப்பிறை — (சர்வவியாபி)

பாப்பிறை ஆறும் சின்னப்பர், பதவி துறக்கப்போவதாகச் செய்தி இதழ்களில் வதந்தி உலவியது. வத்திக்கான் அதிகாரிகள் இவ்வதந்தி ஆதாரமற்றதென மறுத்தனர். இச் சமயத்தில், திருச்சபை வரலாற்றில் உண்மையாகவே பதவி துறந்த பாப்பு ஒருவரைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

கி. பி. 1294-ஆம் ஆண்டில் இத்தாலியிலுள்ள அப்ருஸி மலைப்பகுதியில் 79 வயதான தூயர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரது பெயர் பீட்டர் தெ மூர்ரோனே. இவர் எளிய பக்தியுள்ள குடும்பத்தில் பிறந்தவர். தமது 17ஆம் வயதில் ஆசீர்வாதப்பர் சபையில் சேர்ந்து துறவியானார். பின்னர் உரோமைநகரில் குருவானார். ஆனால், இவர் உள்ளம் ஏகாந்தத்தை மிகவும் விரும்பியது. இனிது, இனிது ஏகாந்தம் இனிதல்லவா? அப்ருஸி மலைப்பகுதியிலுள்ள மூர்ரோனே மலையில் தனிமையில் துறவறவாழ்க்கையை மேற்கொண்டார். அவர் வாழ்ந்த மலையின் பெயரே அவர் பெயரோடு இணைந்து வழங்குகிறது. பின் மேலும் தனிமையை விரும்பி மஜெல்லாமலைப் பகுதிக்குச் சென்று தவ வாழ்வை மேற்கொண்டார்.

இவர் ஸ்நாபக அருளப்பரை முன்னோடியாகக் கண்டுபாவித்தார். மயிருடை அணிந்தார். இரும்புச்சங்கிலியொன்றை இடையில் அணிந்தார். ஞாயிற்றுக்கிழமைதவிர மற்ற நாட்களில் நோன்பிருப்பார். ஆண்டில் நான்குமுறை தவக்காலம் மேற்கொள்வார். ரொட்டியும் தண்ணீருமே உணவாகக் கொள்வார். பகல் முழுவதையும், இரவின் பெரும்பகுதியையும், செபத்திலும், உடலுழைப்பிலும் செலவழிப்பார்.

இத்தகைய தூய்மையான துறவியின் புகழ் எங்கும் பரவியது. அவரது தனிமை விரும்பும் எண்ணம் ஈடேறவில்லை. உள்ளத்து உணர்ச்சியால் தூண்டப்பட்ட துறவியர் பலர் இவரைத் தேடிவந்து தவம்புரியத் தலைப்பட்டனர். சுமார் 600 துறவிகள் கொண்ட 36 துறவற நிலையங்களுக்கு இவர் ஆன்மீகத் தலைவராய் விளங்கினார். இது அவரது தனிமை வாழ்விற்கு இடையூறாக இருந்தது.

1284ஆம் ஆண்டில் தமது தனிமை வாழ்விற்கு ஏற்பட்ட இடையூறுகள் கண்டு மனம்கலங்கி, ராபர்ட் என்பவரைத் தமக்குப் பதிலாக நியமித்துவிட்டு யாவருமறியாத் தனிமை வாழ்வை மேற்கொள்ள வனாந்தர உட்பகுதிக்குச் சென்றார். இவரது தனிமையான தவவாழ்வு 1294-ம் ஆண்டுவரை அதாவது பத்து ஆண்டுகள் நீடித்தன. வனவாசியான இவருக்கு அப்போது வயது 79.

1294-ம் ஆண்டு ஜூலை மாதம் திருச்சபை வரலாறு காணாத, புதுமையொன்று நிகழ்ந்தது. மூன்று திருச்சபைப் பெரும் தலைவர்களும், துறவிகள் பலரும் மாபெரும் மக்கள் கூட்டமும், வனவாசி பீட்டர் வாழ்ந்துவந்த மலைப்பகுதியை அடைந்து அவரைக் கண்டு, அவர் பாப்பிறையாக ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டதை அறிவித்தனர்.

பாப்பிறையைத் தேர்ந்தெடுக்கக் கர்தினால்கள் ஏற்கெனவே கூடியிருந்தனர். பன்னிரண்டு கர்தினால்கள்தான் அப்போது இருந்தனர். ஆனால், அவர்களுக்குள் பிளவு இருந்தது. ஒற்றுமையில்லை ஆகையால், பாப்பிறையைத் தேர்ந்தெடுக்கும் கூட்டம் இரண்டாண்டு மூன்றுமாதம் நீடித்தது. நிலைமை நாளுக்குநாள் சீர்கேடுற்றது. கர்தினால் லாத்தினோ ஆர்சினி (Letino Orsini) வனவாசி யொருவருக்கு இறைவன் வெளியிட்ட உண்மையைக் கர்தினால்மார்களுக்குத் தெரியப்படுத்தினார். அவ்வுண்மையாவது கர்தினால்கள், தங்கள் கடமையாம் பாப்பிறையைத் தேர்ந்தெடுக்கும் பணியை இன்னும் நான்குமாதங்களில் நிறைவேற்றத் தவறினால், இறைவன் திருச்சபையைக் கடுமையாகத் தண்டிப்பார்" என்பதாகும்.

இதனைக் கேட்டதும் கர்தினால்கள் அனைவரும், அவ்வனவாசி பீட்டர் தெ மூர்ரோனே என்பதை உணர்ந்தனர். "அவரையே ஏன் பாப்பிறையாகத் தேர்ந்தெடுக்கக்கூடாது" என்று எண்ணிய கர்தினால்கள் அவரையே ஏகமனதாய்ப் பாப்பிறையாகத் தேர்ந்தெடுத்தனர்.

பாப்பிறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை அறிந்த பீட்டர் கண்ணீர் வடித்தார். ஆழ்ந்த செபம் செய்து, இறைவனின் குரலுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென உணர்ந்தார். இதற்குள் செய்தி எங்கும் பரவவே, சுமார் 200,000 மக்கள் அவரிருப்பிடம் சூழ்ந்து வரவேற்றனர்.

### அரசர்கள் அழைத்து வந்தனர்

நேப்பிள்ஸ் அரசன் சார்லஸ் என்பவரும், அவரது மகன் ஹங்கரி நாட்டு இளவரசன் சார்லஸ் மார்ஷல் என்பவரும், தங்களது குடிமகனொருவர் பாப்பிறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை அறிந்து தங்கள் மகிழ்ச்சியையும் மதிப்பையும் தெரிவிக்க விரைந்தனர். எளிய, வயதான தூயவருக்கு வரவேற்பளித்து, அழைத்து வந்து நேப்பில்ஸ் நாட்டிலுள்ள அக்குய்லா நகரில் முடிசூட்ட வேண்டுமென்று விரும்பினர். புதிய பாப்பிறை கோவேறு கழுதையின்மீது அமர்த்தப்பட்டார். அதன் கடிவாளத்தை இரண்டு அரசர்கள் பிடித்துக்கொண்டு நடத்திச் சென்றனர். அரசனது விருப்பப்படியே அக்குய்லா நகரில் பாப்பிறைக்கு முடிசூட்டுவிழா நடைபெற்றது. அப்போது **ஐந்தாம் செலஸ்தீன்** என்ற புதுப் பெயர் சூட்டிக்கொண்டார்.

அவரது ஞானஆட்சி ஐந்துமாதம் நடைபெற்றது. ஒரு வரலாற்று ஆசிரியர் அவரது ஆட்சியைப்பற்றி எழுதுவதாவது "கள்ளம் கபடற்ற வயோதிக பாப்பிறை, குறுகிய ஐந்துமாதங்களில் கணக்கற்ற ஆட்சித் தவறுதல்களைச் செய்துள்ளார்."

இவர் பதவிகளை எல்லோருக்கும் அளித்தார். கேட்போருக்கு இல்லையென்னாது வாரி வழங்கினார். ஒரே கோவிலின் அதிகாரத்தைப் பலருக்கு உரிமையாக்கினார். இதனால் பல உரிமையாளர்கள் தோன்றினார்கள்.

நேப்பிள்ஸ்நகரில் அரசன் இவருக்கு ஒருமாளிகை அளித்திருந்தான். இவர் அதில் தங்கி இருக்காமல், அதன் அருகில் சிறிய குடிசை அமைத்து அதில் வாழ்ந்து வந்தார்.

### பாப்பிறை பதவி துறக்கலாமா?

தனது பதவியைத் துறக்க எண்ணங்கொண்டார் பாப்பிறை. ஆனால், திருச்சபைச் சட்டம் ஐயத்தைக் கிளப்பியது. இவ்வுலகில், பாப்பிறைக்கு மேலதிகாரி எவரும் இல்லை. அவரது பதவித் துறப்பை யார் ஏற்றுக்கொள்வது என்பது விளங்கவில்லை. திருச்ச்பைச் சட்ட வல்லுநர் கர்தினால் கயத்தானி (Gaitani) என்பவரிடம் இதுபற்றி ஆலோசனை கேட்டார் பாப்பிறை. கர்தினால் கயத்தானி, ஆய்ந்து திருச்சபையின் உரிமைக்காகவும், பாதுகாப்பிற்காகவும், பகுத்தறிவுக்கு உகந்தவகையில் பாப்பிறை பதவியைத் துறக்கலாம் என்று சொன்னார்கள். அதன்படி 1294-ம் ஆண்டு பாப்பிறை ஐந்தாம் செலஸ்தீன் பதவி துறந்தார்.

பதவி துறந்தபின் தனக்கு விருப்பமான ஏகாந்த வாழ்க்கைக்குத் திரும்பிப்போக எண்ணினார். ஆனால், இவருக்குப் பின் பா[illegible] ஆசீர்வாதப்பர் இ[illegible] வாழ்க்கைக்கு அனுப்பவில்லை. பாப்புவின் பகைவர்கள் இவரைப் பயன்படுத்திக் கலகம் விளைவிப்பார்கள் என்பதால், இவரைப் பாதுகாப்பான இடத்தில் வைத்தார்கள். எவ்வாறோ, பழைய பாப்பிறை தப்பிச்சென்றார். மாஜெல்லா மலைப்பகுதியில் வாழ்ந்த துறவிகள் இவருக்கு வரவேற்பளித்தனர். இவர் தப்பியதை அறிந்த எட்டாம் ஆசீர்வாதப்பர், அவரைக் கைதுசெய்யக் கட்டளையிட்டார். இதனை அறிந்ததும் மலைகளிலும் நாடுகளிலும் பல மாதங்கள் சுற்றித்திரிந்தார். இறுதியாகக் கைது செய்யப்பட்டார். அனாஞ்ஞி (Anagni) நகருக்கருகிலிருந்த கோட்டையில் சிறிய அறையில் காவலில் வைக்கப்பட்டார். இரண்டு துறவிகள் அவருக்குப் பணிவிடை செய்தனர், காவலாளிகள் இடைவிடாது காத்துவந்தனர். ஒன்பது மாதம் இவ்விடத்தில் செபத்திலும், தவத்திலும் கழித்தார். இறுதியாக தமது 91-ம் வயதில் இவ்வுலக வாழ்வைத் துறந்து மறுஉலக வாழ்வைத் தொடங்கினார்.

1313-ம் ஆண்டில் ஐந்தாம் கிளெமெண்ட் பாப்பிறை இவருக்குப் புனிதர் பட்டம் வழங்கினார். இவரது திருநாள் மேமாதம் 19-ம் தேதி கொண்டாடப்படுகிறது.

---

# இலங்கை உணவுஉற்பத்தித் திட்டங்களுக்குக் கிடைக்கும் கடன்

## சர்வதேச அபிவிருத்திச்சங்கம் கொடுக்கிறது

உவாஷிங்டன் — இலங்கையின் உணவுஉற்பத்தி அதிகரிப்புக்கான திட்டங்களுக்காக சர்வதேச அபிவிருத்திச் சங்கம இருபதுலட்சம் டொலர் கடன் கொடுக்க முன்வந்திருக்கிறது.

இலங்கையின் வரண்ட பிரதேசங்களிலுள்ள மேட்டுநிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யப்பட விருக்கிறது. 6,500 ஏக்கர்நிலத்தில் நீரை மேலே பாய்ச்சும்முறை அனுசரிக்கப்பட விருக்கிறது. இங்கு மிளகாய், வெங்காயம் போன்ற உபஉணவுப்,பொருட்கள் பயிரிடப்படும். இவற்றுக்காக ஒருகோடி டொலருக்குமேல் வருடம்ஒன்றுக்கு வெளிநாடுகளுக்குச் செல்கிறது. இத்திட்டத்தினால் இத்தொகை இலங்கையில்தங்க வாய்ப்புக் கிடைக்கும். வெளிநாட்டுச் செலாவணி மிஞ்சவும், பண்ணைகள் செழிக்கவும் வழிபிறக்கும்.

இலங்கையின் ஜனத்தொகையில் சரிஅரைவாசியினர் விவசாயத்துறையில் ஈடுபட்டவர்களே. ஆனால், உள்ளூரில் தேவைப்படும் பண்டங்களில் ஏறத்தாழ மூன்று விகிதத்தினை மட்டுமே இவர்கள் உற்பத்தி செய்கின்றனர். இவர்கள் உற்பத்திசெய்யும் பண்டங்கள் 90சதவிகிதம் வெளிநாடுகளுக்குச் செல்கின்றன. வெளிநாடுகளுக்குச் செல்லும் பண்டங்களின் உற்பத்தி செய்யப்படுவதற்கு வேண்டிய உற்சாகத்தைக் கொடுப்பதுடன், இலங்கை அரசாங்கம் உள்ளூரில் சுயதேவைப் பூர்த்தியைக் காணவும் ஆவனசெய்து வருகிறது. வரண்ட பிரதேசத்திலுள்ள வளமான நிலத்தைச் செழிப்பாக்குவதில் அரசாங்கம் தீவிரகவனம்செலுத்துகிறது.

சர்வதேச அபிவிருத்திச் சங்கம் இலங்கைக்குக் கொடுக்கும் 20லட்சம் டொலர் 50வருடங்களில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியது. ஆனால், இதற்கு வட்டிகிடையாது.

இலங்கையில் நான்குபிரதேசங்களில் முடிக்குரிய காணிகளில விவசாயிகளை அரசாங்கம் குடியேற்றியிருக்கிறது. இங்கெல்லாம் நீர்ப்பாசனவசதிசெய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக இங்கு குடியேற்றவாசிகள் இருந்து வருகின்றனர். மூன்றுஏக்கர் நெல் சாகுபடிக்காகவும், இரண்டு ஏக்கர் ஏனைய உபஉணவுப்பொருட்கள் சாகுபடிக்காகவும் ஒவ்வொரு குடியேற்றவாசிக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. மேட்டுநிலங்களுக்குச் சாதாரணமாகப் பாய்ச்சப்படும்நீர் செல்லுவதற்கு வழியில்லை. இத்தகைய மேட்டுப்பாங்கான பூமிக்கு 50அடி உயரம்வரை நீரை மேலேற்றிப் பாய்ச்சுவதற்குப் புதியதிட்டம்ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலங்களில் தான் வெங்காயமும், மிளகாயும் பயிரிடப்படும். இத்தகைய திட்டங்களில் செலவிடப் படுவதற்காகவே மேற்படிபணம் செலவிடப்படும்.

மேற்படி குடியேற்றநிலங்களை அடுத்து இளம்விவசாயிகளுக்கான வேளாண்மைப்பூமி வழங்கப்படவிருக்கிறது. 17-க்கும், 21வயதுக்கும் உட்பட்ட இளைஞர்களுக்கு உபஉணவுப் பொருட்களை விளைவிப்பதற்காக இத்திட்டத்தின்கீழ் இரண்டுஏக்கர்வீதம் காணி கொடுக்கப்படவிருக்கிறது. இங்கு இவர்கள் வதிய வீடும் கட்டிக் கொடுக்கப்படும். நான்குவருடங்களில் இத்திட்டம் முடிவுபெற்று வேண்டியபலனைக் கொடுக்கும்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காணி, நீர்ப்பாசன, மின்சாரஅமைச்சே இதற்கான பூர்வாங்க திட்டங்களைச் செயற்படுத்தும். ஐ. நா. உணவு விவசாயநிறுவனம் பலதிட்டங்களிலும் ஒத்துழைப்புக் கொடுக்கும்.

USIS

---

# யூகோசிலேவிய இளைஞர் சமய அனுசாரத்தை விரும்புகின்றனர்

யூகோசிலேவியா தேசப் பத்திரிகை "பொலிற்றிக்கா"வில் கூறியிருப்பது உண்மையாயின் அத்தேச இளைஞர் உண்மையாகவே சமய அனுசாரத்தை விரும்புபவர்களாக இருக்கின்றனர். கொமியூனிஸ்தர்கள் எனக் கருதப்பட்டவர்களும் சிலசில இடங்களில் நூற்றுக்கு ஐம்பது வீதம் தாம் கோவில்சென்று பூசை காண்பவர்களெனக் கூறியிருக்கின்றனர். "பொலிற்றிக்கா" என்னும் பத்திரிகை அத்தேச கொமியூனிஸ்த அரசாங்கத்தால் நடத்தப்படும் பத்திரிகைகளில் ஒன்று.

---

● அமெரிக்க நீகிறோவர்களின் தலைவரான டக்ற்ர்மாட்டின் லூதர் கிங் அவர்களைக் கொலைசெய்தவனென அமெரிக்கரால் கருதப்படும் ஜேம்ஸ் ஒற்றேஎன்பவன் சமீபத்திலே லண்டன் விமானநிலையத்தில் ஸ்கொத்திலாந்த துப்பறியும்நிபுணர்களால் கைதுசெய்யப் பட்டிருக்கிறான். இவன் பலதினங்களாகப் பலநாடுகளினூடாகச்சென்று அமெரிக்க துப்பறியும் நிபுணர்களுக்குத் தப்பிக்கொண்டுவந்தான்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சுக்கூடத்தில் 1968ஆம்ஆண்டு ஆனிமீ 22-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org